ஸ்ரீ முத்துவேலவர்கள் பதிகம்

முத்துமாடர் (கி. கூ)

Q26:417
N22
225530

முருகன் துணை.

அருப்புக்கோட்டை என்னும் திருநல்லூர்,

# ஸ்ரீ முத்துமாரியம்மன்,

# பதிகம்.

229

20 APR 1922



இது

கன்னிச்சமீன் சரபம்

முத்துசாமி கவிராய ரவர்கள்,

மாணவர்

## சு. ஆ. முத்து நாடார்

எழுதியது.

---

அருப்புக்கோட்டை,

ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

**1922** [அணா 1.

Q25:417

N22

225530

# சாற்றுக்கவி.

இது

சென்னை, ஸ்ரீகிருஷ்ண மனோரஞ்சித நாடகசபை

உபாசிரியர்

சு. சு. சங்கரலிங்க நாடார் எழுதியது.

## ஆசிரிய விருத்தம்.

கல்விக் களஞ்சியங் கலைமக ளிருப்பிடம்
　　கவிராஜ ராஜர் மகுடம்
காசினி யெலாம்போற்றுங் கன்னிச் சமீன்சாமி
　　கவி முத்துச்சாமி வள்ளல்
சொல்விற்ப னம்பெற்ற தூயநன் னேயநற்
　　சுருதிமுறை தவராத மா
சுகுணகுண சிங்காரன் மதுரைநகர் பாண்டியன்
　　தோன்றல் திருநல்லூர் வளர்
செல்வன் சு ஆ முத்து நாடன் பத்திரகாளி
　　சிவகாமி அபிராமி யாம்
திருமுத்து மாரிமேல் பதிகமாய் சொன்னதோர்
　　செந்தமிழ் பாடல் பத்தும்
தொல்புவிக் கமுதமாம் பாவாணர் கெம்பொனும்
　　சொல்லொணு தமிழ் ரத்னமாம்
சுகமுதவு கற்பகத் தருவெனி லிதன்பெருமை
　　சொல்ல யாருண்டு மாதோ.

தமிழ்நாடு ... க் காப்பக நூலகம்
225530

உ

முருகன் துணை.

திருநல்லூர்

# ஸ்ரீ முத்துமாரியம்மன்

# பதிகம்.

894.811
2824

## விநாயகர் துதி.

அறுசீராசிரிய விருத்தம்.

சுந்தரி கவுரி நீலி துரந்தரி யுமையாள் மீது
செந்தமிழ் பதிக மோத திருவருள் புரிந்து காக்கும்
சந்ததம் தான் தர்மம் தழைக்திடும் நல்லூர் பால
சுந்திர கணேசன் பாதத் தூயமா மலர்கள் மாதோ.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு காவனஞ் சூழ்டழன பொய்கைவான்
திகழ்மாட கூட மாதி
சிவஞான யோகியர்கள் தவமே புரிந்திடும்
சிவன் விஷ்ணு கோயிலிலகும்
தார்மேவும் வித்வஜன மெச்சிடுஞ் சான்றோர்கள்
சங்கம் பிரசங்க மெங்கும்
சப்தமே பிரசித்த மதுகித்த நடைபெற்று
தருமந் தழைந்து நிற்கும்
நீர்மேவு முடிசடைக் கடவுளுக் கினியசுதன்
நீலமேகன் மருமகன்
நித்தியா னந்தமுரு கன்எனது மனமதில்
நித்தமும் நிறைந்த தெய்வம்
தேர்மேவும் சரவணன் பேரசுரர் போர்வென்ற
சிங்கார வேல னிலகும்
திருநல்லூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

உன்பிள்ளை யாறுமுக னுக்குற்ற பிள்ளைநான்
ஓதும்விண் ணப்ப மொன்று
உந்தனால் நான்பெற்ற பொன்முனா ஏதுதவரி
புளஞ்சற்று வாட லானேன்
தென்புட னெடுத்தவர்கள் தந்திடும் படியுனது
திருவருள் செய் யலாது
தென்திசைக் கதிபனை விட்டந்த வஞ்சகரை
தேடிப் பிடித்து வந்து
துன்புரச் செய்தவர்கள் சந்ததி துலங்கிடாத்
தொழில்செய்தால் குற்ற முண்டோ
தொல்லுலகி லெவர்க்குங் கள்ளனிவ னென்றுமே
தோன்றினால் போது மம்மா
சின்மய சொரூபிமுக் கண்ணியார் வதிசந்தி
ஸ்ரீங்காரி ரீங்காரி வோம்
திருநலா ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

ஓடித்தி ரிந்தலையு மனக்கு ரங்கைப்பிடித்
தொடுக்கவுங் கூடு தில்லை
உற்றசா யுச்யபதம் பெற்றுநான் வாழ்வதற்
கொருவழி தோன்று தில்லை
தேடிப்பொ ருள்கொள்ளு மாசைவில காதபல
செய்கைமேற் கொண்டு உலகில்
தினந்தேடி யுண்டுண் டுறங்குவதினா லெந்தன்
ஜென்மசா பல்ய மாமோ
கோடிக் கணக்கான ஜீவபே தத்துளே
குடியிருந் தாலு முமையே
கொல்லாமை யெனும்விரதங் கொண்டவரு டன்கூட
குணங் கொடுத் தாலுமம்மா
தேடிமா லயனிருவர் காணொணா செல்வியே
தில்லை வாழ்சிவ காமியே
திருநலா ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

காளமேகம் புகழேந்தி யொட்டக் கூத்தன்
    கம்பனுங் காளி தாசன்
காசினியில் அழியாத புகழ்பெற்ற காரணங்
    காளிநீ தானு மில்லையோ
சோழபாண் டியசேர ராஜகுல தெய்வமாய்
    துலங்கிநீ நிற்க வில்லையோ
தொல்லுலகில் நல்லோரை யல்லல் படுத்திடுந்
    துஷ்டரை யடக்க வில்லையோ
தாளமோ டிணைசுத்தி யோடுநான் பாடிடும்
    தன்மை தந்தாளு மம்மா
தாயே பராசத்தி நானே செயும்பக்தி
    தானேற்க வேண்டு மம்மா
தேளரா விடம்பில்லி சூனியமெ லாந்தீர்க்கும்
    தேவிநீய கிருபை செய்வாய்
திருநலூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
    திருமுத்து மாரி யுமையே.

தீயவழி தன்னிலொரு காசாகி லுந்தேடி
    சேர்த்துநான் வைக்க வில்லை
செல்வம்வந் துற்றதென நல்லோரை மதியாத
    தீயர்பாற் சேர வில்லை
ஞாயமில் லாமல்மன சாக்ஷியின் விரோதமாய்
    நடக்கவுந் துணிந்த தில்லை
நட்புமுகங் காட்டியகத் துட்புறம் பாயெண்ணி
    நண்பரைக் கெடுத்த தில்லை
தூயமங் களபுரந் தரியுனது நற்புகழ்
    தோத்திர மறக்க வில்லை
துன்பம்வந் தணுகாம லென்பா. லிருந்துநீ
    துணைசெய்ய வேண்டு மம்மா
தேயமெங் கும்போற்றும் தீனர்க் கு[illegible]ரி
    சிவன்பாரி சூரி விழி
திருநலூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
    திருமுத்து மாரி யுமையே.

மாதாபிதா வெந்தன் குருதெய்வம் நீயிந்த
　　மகிதலம் படைத்த வளும்நீ
மகிடாசு ரன்றனை வதைத்துவா னவருக்கு
　　வரமுங் கொடுத்த வளும்நீ
வேதாங்க மானதற் காதார மானநீ
　　வேணி நீகலை வாணிநீ
வெண்ணையுண் டோன்தங்கை நீகங்கை நீவேத
　　வித்துநீ சித்து நீயே
சிதார விந்ததிரு நல்லூரில் சான்றோர்கள்
　　சேவித்திடும் தெய்வம் நீ
திரிபுர மெரித்தசிவ னிடபாகம் பெற்றவன்
　　திருக்கண் புதைத்த வளும்நீ
தீதான செயலொன்றும் செய்கிலே னிதுவுந்தன்
　　சிந்தைதான் தெரியு மம்மா
திருநலூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
　　திருமுத்து மாரி யுமையே.

வேலுமயி லுந்துணை யாகுமென நம்பிடும்
　　மெய்யடி யார்கள் தங்கள்
வெவ்வினை யகற்றிடுஞ் சண்முகக் கடவுளை
　　விண்ணவர்க் கனு கூலனை
மாலுந்தி வந்தபிர மன்றன்னை குட்டியே
　　மாறி நின்றுடி னோர்க்கு
மறைவான பிரணவப் பொருள்தனை யுரைத்திட்ட
　　மாசிலா முரு கேசனை
பாலனைய வருணகிரி கிரன் றமிழ்க்குநற்
　　பக்ஷம் வைத்தாண்ட குகனை
பாலனைப் பெற்றசிவ காமிநற் றருணமிதுன்
　　பாலனெனை காத் தருளுவாய்
சீலமிகு ஜெயசிங்க வாகனி மகேஸ்வரி
　　சிற்பரா னந்த விமலி
திருநலூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
　　திருமுத்து மாரி யுமையே.

பொன்னையும் பொருளையும் பூமியும் பெற்றநற்
புகழோ டிருந் திட்டாலும்
பூவையொடு மக்கள்மனை யாவையும் பெற்றிந்த
புவிதனில் வாழ்ந் திட்டாலும்
தன் னறுங்கு முணறு மென்னவே காசினியில்
கதிரியா டிருந்திட் டாலும்
கவிராய ரிவனென்று புவியோர்கள் புகலும்நற்
கல்யாணம் பெற்றிட் டாலும்
அன்னையே வுன்னருள் தன்னையோ ரணுவள
வாகிலும் பெசாத பேர்க்கு
ஆலயந் தொழுவது சாலவே நன்றென்ற
அறிவுந் தாரு மம்மா
தென்னைமா கதலிமல் லிகைமுல்லை வர்க்கங்கள்
சேர்ந்தண்ட மூடி நிற்கும்
திருநூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

தொண்டருள மகலாத துர்க்கைமா காளிவா
சூரசங் காரி வாவா
தூய்மதுரை தனையாண்ட பாண்டியகு மாரிவா
சொற்றமிழ்க் கரசியே வா
மண்டலம் புகழவிட முண்டவன் தேவிவா
வாலையபி ராமி வாவா
மலைராஜன் பெற்றமக ளேமனோன் மணியேவா
மாசிலா ஈஸ்வரியே வா
அண்டியுன் கோயில்நான் நின்றுதுதி பாடுமென்
னருகிருந் தாள வாவா
அபிராமி குறமாமி சுகவாமி குருசாமி
அம்மையே கருணைம் வருவாய்
தெண்டனிட் டசுரேசர் தொண்டுசெய் தேபோற்று
சிங்க வாகனி யம்பிகா
திருநூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

வாணியரு ளும்பெற்று மன்னர்புக ழும்பெற்ற
மகாகவி வாணர் தங்கள்
மனம்நா ணும் படியாக பலபா வினம்பாடும்
மனோதர்ம நிலை பெற்றுநற்
காணிவிளை வோடுபல தேசரா வும்பெற்ற
கன்னிச் சமீன் சாபமாம்
கவிமுத்து சாமிதமி ழருள்பெற்ற சீடனென்
கவிபாடி நின் பாதமே
பேணிப் பணிந்திடும் மனமீந்து பொருளீந்து
பெருமைசேர் குணமு மீந்து
பேசரிய நின்னடிமை பெயரீந்து குறைநீக்கி
பிரியம் வைத்தாளு மம்மா
சீனிகற் கண்டுதேன் பால்தயிர் பலாவாழை
தினமுநின் கோயில் நிறையும்
திருநலூ ரெனுமருப் புக்கோட்டை நகரில்வளர்
திருமுத்து மாரி யுமையே.

ஸ்ரீ முத்துமாரியம்மன்
பதிகம்,
முற்றிற்று.

தமிழ்நாடு ... காப்பக நிலையம்
225530